DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 234/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : சத்தியமூர்த்தி (P.w.2)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21th day of January 2026

(எதிரி ஆஜர் ).

**முதல் விசாரணை :–**

நான் தற்போது சவ்வாஸ்புரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஜேசிபி டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். விபத்து நடந்த அன்று டாடா ஏசிஇ வாகனத்தை ஓட்டி வந்த நபர் இவர்தான். கடந்த 2018ம் வருடம் தேதி மாதம் ஞாபகமில்லை ஒரு நாள் எனது வீட்டில் இருந்தபோது மாலை 6– 6.30மணியளவில் வீட்டருகே உள்ள எனது ஊர் பேருந்து நிறுத்தத்தில் சத்தம் கேட்டு நான் சென்றபோது 65 வயது மதிக்கதக்க ஒரு பாட்டி கண் புருவத்தில் காயங்களுடன் இருந்தார். அந்த பாட்டி பேருந்தில் இருந்து இறங்கி வடக்கில் இருந்து

தெற்காக சாலையை கடந்து மள்ளம்பட்டிக்கு சென்றபோது ரெட்டியப்பட்டியில் இருந்து அருப்புக்கோட்டை நோக்கி வந்த டாடாஏசிஇ வாகனம் அந்தபாட்டியின் மீது மோதியதாக கூறினார்கள். 108 ஆம்புலன்ஸ் மூலம் அந்த பாட்டியை அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். அதன்பிறகு அந்த பாட்டி இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். நான் பார்த்தபோது அந்த இடத்தில் டாடா ஏசிஇ வாகனம் இருந்தது. ஆஜர் எதிரிதான் அந்த டாடா ஏசிஇ வாகனத்தை ஓட்டி வந்தார். போலிசார் என்னை விசாரித்தார்களா என்று எனக்கு ஞாபகமில்லை.

**எ.த.கு.வி –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 234/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : **பிச்சைப்பாண்டியன் (P.w.1)**

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21th day of January 2026

(எதிரி ஆஜர் ).

**முதல் விசாரணை :–**

நான் தற்போது சவ்வாஸ்புரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மில்லில் வேலை செய்து வருகிறேன். கடந்த 09.06.2018ம் தேதியன்று நான் எனது ஊரில் இருந்தபோது குலசேகரநல்லூரைச் சேர்ந்த நாகலிங்கம் என்பவர் மாலை 6மணியளவில் போன் மூலம் எனது அத்தை பாப்பம்மாள் பேருந்தில் சவ்வாஸ்புரத்திற்கு பேருந்தில் வருவதாக கூறினார். அவரை அழைத்துச் செல்வதறக்காக நான் எனதுஊரில் உள்ள மெயின் ரோட்டின் பேருந்து நிறுத்தத்திற்கு அருகே உள்ள ஒரு ஓட்டலில் நின்று கொண்டிருந்தேன். அப்போது மாலை 6.30மணியளவில் எனது மாமியார்

அருப்புக்கோட்டை – சாயல்குடி செல்லும் சாலையில் பேருந்தை விட்டு இறங்கி வடக்கில் இருந்து தெற்காக சாலையை கடக்கும்போது கல்லூரணியில் இருந்து அருப்புக்கோட்டை நோக்கி கிழக்கில் இருந்து மேற்காக வந்த டாடா ஏசிஇ வாகனம் வந்து எனது மாமியார் பாப்பம்மாளின் மீது மோதிவிட்டது. பேருந்தை விட்டு எனது மாமியார் இறங்கியவுடன் நான் எனது மாமியாரை பார்ப்பதற்காக நடந்து சென்றேன். நான் சென்று மாமியாரை பார்த்தபோது ரோட்டின் தென்புறமாக கீழே விழுந்துகிடந்தார். இரண்டு கண்புருவத்தில் காயம் இருந்தது, காதில் ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. அவர் மயக்க நிலையில் இருந்தார். அதன்பிறகு எனது மைத்துனருக்கு போன் மூலம் தகவல் கூறினேன். 108 ஆம்புலன்சில் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தோம். அதன்பிறகு மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்தார்கள். அன்று இரவே சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். மறுநாள் நான் திருச்சுழி காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தேன். டாடா ஏசிஇ வாகனத்தை ஓட்டி வந்தவர் அருப்புக்கோட்டை சேர்ந்தவர் என்று தெரிந்து கொண்டேன். பெயர் ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த புகார் அசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.